DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM
DATE: 20.10.2020

Case No	**:**	CC.198/2018
Deposition of Witness for Prosecution	**:**	P.W.1
Name	**:**	செல்வி
Father's Name	**:**	W/o. அமல்ராஜ்
Village	**:**	பிரண்டார்குளம்
Taluk	**:**	சாத்தான்குளம்
Caste	**:**	-----
Calling	**:**	கூலி
Religion	**:**	கிறிஸ்டியன்
Age	**:**	48

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of October 2020.

முதல் விசாரணை:

நான் பிரண்டார்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எனது ஊரைச் சேர்ந்தவர்கள். எதிரிகளுக்கும் எனக்கும் பொதுக்குழாயில் தண்ணீர் பிடிப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. எனது வீட்டின் முன்பு பொதுக்குழாய் இருந்தது. அதில் தண்ணீர் தேங்கி சாக்கடையாகி நாற்றம் அடித்துக்கொண்டிருந்தது. நான் எதிரிகளிடம் தண்ணீரை தேங்கவிடாதீர்கள், சாக்கடையாகிறது என்று கூறினேன். அதற்கு அவர்கள் நாங்கள் அப்படிதான் பிடிப்போம் என்று கூறினார்கள். எனவே இது சம்மந்தமாக பஞ்சாயத்து அலுவலகத்தை அணுகி புகார் அளித்தேன். பஞ்சாயத்திலிருந்து வந்து எனது வீட்டின்

முன்பிருந்த பைப்பை எடுத்து வேறொரு இடத்தில் வைத்துவிட்டார்கள். 23.04.2017 அன்று நான் காலை 8.00 மணி அளவில் இடம் மாற்றம் செய்யப்பட்ட பைப்பில் தண்ணீர் பிடிக்க சென்றேன். அப்பொழுது அங்கிருந்த எதிரிகள் என்னை பார்த்து ஏ தேவடியா நீ எவன் கூட படுத்து பைப்பை மாற்றினாய் என்று ஏசினார்கள். எதிரி கிறிஸ்டோபர் நான்தான் இந்த ஊர் கணக்குப்பிள்ளை, என்னை கேட்காமல் எப்படி பைப்பை மாற்றினாய் என்று கூறி என்னை தேவடியா என்று கூறி திட்டினார். பொன்ராணி, மெர்லின், அருள்சீலி ஆகியோர் என்னை அடித்து கீழே தள்ளினார்கள். மெர்லின், அருள்சீலி எனது வலது கையின் மணிக்கட்டில் கடித்துவிட்டார்கள். நான் வலி தாங்கமால் அழுத சத்தம் கேட்டு எனது மகள்கள் கனகா மற்றும் ஜெனிபர் வந்தார்கள். அப்பொழுது அஜித் என்பவர் எனது மகள்களின் துணியை உரிந்து அவமானப்படுத்த வேண்டும் என்று கூறினார். இதனால் நாங்கள் பயந்து போய் வீட்டிற்கு சென்றுவிட்டோம். காயம்பட்ட நான் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ–1 ஆகும். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

Signed by Tr. D.Saravanan,
Judicial Magistrate,
Sathankulam.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM
DATE: 20.10.2020

Case No	**:**	CC.198/2018
Deposition of Witness for Prosecution	**:**	P.W.2
Name	**:**	கனகா
Father's Name	**:**	**அமல்ராஜ்**
Village	**:**	**பிரண்டார்குளம்**
Taluk	**:**	**சாத்தான்குளம்**
Caste	**:**	**_____**
Calling	**:**	**___**
Religion	**:**	**கிறிஸ்டியன்**
Age	**:**	24

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of October 2020.

<u>முதல் விசாரணை:</u>

நான் பிரண்டார்குளத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது தாயார் ஆவார். எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். எதிரிகளுக்கும் எங்களுக்கும் பொதுக்குழாயில் தண்ணீர் பிடிப்பது சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. பொதுக்குழாய் எங்களது வீட்டின் சுவற்றுப்பக்கம் இருந்தது. அதிலிருந்து தண்ணீர் வெளியேறி தேங்கியிருந்தது. எனது தாயார் இது சம்மந்தமாக எதிரிகளிடம் கூறினார்கள். பின்பு பஞ்சாயத்தில் புகார் கூறி அவர்கள் வந்து பார்த்து பொதுக்குழாயை எடுத்து வேறு இடத்தில் வைத்துவிட்டார்கள். 23.04.2017 அன்று காலை 8.00 மணி அளவில் எனது அம்மா பைப்பில் தண்ணீர் பிடிக்க சென்றார். அப்பொழுது அங்கிருந்த

எதிரிகள் எனது அம்மாவை தேவடியா என்று ஏசினார்கள். அப்போது எதிரி கிறிஸ்டோபர் எனது அம்மாவிடம் என்னைக் கேட்காமல் நீ எப்படி பைப்பை மாற்றலாம் என்று கூறினார். பின்பு பொன்ராணி மற்றும் மெர்லின் அருள்சீலி எனது தாயாரின் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார். மெர்லின் அருள்சீலி எனது தாயாரின் வலது கை மணிக்கட்டில் கடித்துவிட்டார். எனது தாயார் அழுத சத்தம் கேட்டு நானும் எனது தங்கை ஜெனிபர் வந்தோம். அப்பொழுது அஜித் என்பவர் எங்களது துணியை உரிந்து அவமானப்படுத்த வேண்டும் என்று கூறினார். இதனால் நாங்கள் பயந்து போய் வீட்டிற்கு சென்றுவிட்டோம். காயம்பட்ட எனது அம்மாவை சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

Signed by Tr. D.Saravanan,
Judicial Magistrate,
Sathankulam.